செப்பித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வரும்

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு ஐப்பசி மீ உஎ உ வெள்ளிக்கிழமை (13-11-1970) [இல-நடஉ

## தக்ஷிண கைலாச மான்மியம்

### 9-வது கதிர்காம மகிமையுரைத்தபடலம்

[ "சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி ]

பலகற்ப காலங்களுக்கு முன்னுள்ள தற்புருஷ கற்பத்திலே, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் திருக்கைலாசமலையிற் போய் சிவபெருமானுடைய திருவடியை வணங்கி 'சூரபதுமனல் மிகவும் துன்பமடைந்தோம் காத்தருளுக" என்று விண்ணப்பம் செய்தார்கள். சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய ஷண்முகக் கடவுளை அழைத்து சூரபதுமன் முதலிய அவுணர்களைச் சங்காரம செய்து தேவர்களது துன்பத்தைத் தீர்த்து வருக என்று அருளிச் செய்து, வேற்படை முதலிய படைக்கலங்களையும் படைத் துணைவர்களாக வீரவாகு முதலிய இலட்சத்தொன்பது வீரர்களையும், அண்டாபரணன் முதலான பூதசேனைத் தலைவர்களையும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளையும் ஓர்தேரையும் கொடுத்தருளி மைந்தனே! போய் வருக என்று விடுத்தருளினர். ஆறுமுகக் கடவுள் பார்வதி பரமேசுரர்களை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சூரியனை ஒத்த தேரின்மீது ஏறியருளினர். சங்கம் பேரிகை முதலான வாத்தியங்கள் ஒலிக்க, வீரரும் பூதரும் புடைசூழ வாயுதேவன் இரதத்தைச் செலுத்த கைலாச கிரியை நீங்கி மாயாபுரியை அடைந்தார். அதை அறிந்த தாரகாசுரன் கோபம்கொண்டு தனது சேனைகளோடும் ஷண்முகப் பெருமானை எதிர்த்துப் போர் செய்தான். குமாரக் கடவுளும் அவனை எதிர்த்துப் போர் செய்தார். தாரகன் மாயையினலே இவரை வெல்லுதல் வேண்டுமென்று கருதிக் கிரவுஞ்சமலைக்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## சிதம்பரத்தில்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் குருபூசை

யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், சென்னை நகரில் வித்தியாநுபாலன யந்திரசாலையையும் நிறுவிய யாழ்ப்பாணம் - நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா 21—11—70 சனிக்கிழமை காலை 6 மணி முதல் 12 மணி வரை, சிதம்பரம் சேக்கிழார் கோவிலும் நாவலர் உயர்நிலைப் பள்ளியிலும், நடராசர் கோவிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும். அன்று மாலை 4 மணி முதல் நடைபெறும் பாராட்டுக் கூட்டத்திற்கு:

திருவாளர். A. V. சுப்பிரமணிய ஐயர் (Research Scholar) தலைமை வகிப்பார்கள், வித்துவான் N. சீனிவாச முதலியார் அவர்களும், புலவர் M. தம்பிராசா M. O. L. அவர்களும் பாராட்டுரை வழங்குவார்கள்.

காலை 7-30 மணிக்கு நாவலர் பெருமான் திருவுருவச் சிலையும் முதற்பதிப்பு நூற்சுவடிகளும் சேக்கிழார் கோவிலிலிருந்து பள்ளி மன்றத்திற்கு ஊர்வலமும், 8-45 பள்ளி மன்றத்தில் குருபூசையும், 11-30 நடராஜர் கோவிலில் அபிஷேகமும் நடைபெறும். மாலையில், பாராட்டுக் கூட்டமும், பாராட்டுரைகளும் பரிசு வழங்குதலும் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆலைப்படுகரும்பின் சாறுபோல
வண்ணிக்குமஞ்செழுத்தி
னமைத்தான் காண்
சீலமுடையடியார் சிந்தையான்
காண்
திரிபுரமுன் றெரிபடுத்த
சிலையினன் காண்
பாலினேடு தயிர் நறுநெய்
யாடினன் காண்
பண்டரங்க வேடன்காண்
பலிதேர்வான் காண்
வேலைவிடமுண்ட மிடற்றி
னன்காண்
விண்ணிழிதண் வீழி
மிழலையானே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## யாழ், அரசினர் சிறைச்சாலை முருகன் கோவிலில்
## சமயப் பிரசாரம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில், யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலையிலுள்ள சைவசமயக் கைதிகளுக்காக அங்குள்ள முருகன் ஆலயத்தில் போயா தினம் தோறும் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் சமய உபந்நியாசம் நிகழ்த்திவருகின்றர்.

1-8-70ல் ஆரம்பிக்கப்பெற்ற கந்தபுராண விரிவுரை 6-11-70ல் விசேட வழிபாட்டுடன் நிறைவெய்தியது. மூன்று மாதகாலம் தொடர்ந்து நடைபெற்றது.

தர்மத்தின் உயர்வும், அதர்மத்தின் வீழ்ச்சியும் கந்தபுராண வாயிலாக அறியலாம். ஆன்மாவைப் பல்வகையான துன்பங்களுக்கு ஆளாக்கும் மும்மலமாகிய ஆணவம், கர்மம், மாயை ஆகியவற்றை ஒழிக்க ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது அதிலும் திருமுறைகளை ஓதுதல், புராணபடனங்களைக் கேட்டல், சிந்தித்தல் அவசியமாகும்.

ஆலயங்கள் தோறும் புராண படனங்கள் நடைபெற வேண்டும். சைவசமயத்தின் பரந்த நோக்கை மக்கள் உணரவேண்டும். "மாயையின் மகனுமன்றே வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்" எனக் கச்சியப்பர் சூரபத்மனை முருகப்பிரான் ஆட்கொண்ட தன்மையைத் தெளிவாக்குகின்றர். எனவே ஐம்புலன் வழிச்சென்று நாங்களும் பல குற்றங்களைப் புரிந்துவிடுகின்றோம். அவற்றை எல்லாம் பிழையென்று உணர்ந்து ஆண்டவனிடம் முறையிட்டால் வாழ்வில் திருந்தயிடமுண்டு. ஆலயங்கள் யாவும் மக்களுக்குப் போதனையையும், சாதனையையும் அளிக்குமிடமாக அமைய வேண்டும் என சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் குறிப்பிட்டார்.

சிறைக் கைதிகளிற் பலர் இறைவழிபாட்டிற் கலந்து, உபந்நியாசங்களைச் சிரத்தையோடு கேட்டுவருவது பாராட்டதிற்குரியது.

——

## தம்பிரான் சுவாமிகளுக்கு தமிழிசைச்சங்கம் அழைப்பு

சென்னையில் 23-12-70 தொடக்கம் 28-12-70 வரை நிகழும் தமிழிசைப் பெருவிழாவில் தலைமை வகிக்கவும், இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தவும் நல்லை, ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்களை அழைத்திருக்கின்றர்கள். எதிர்வரும் 14-12-70 இல் சுவாமிகள் பாரத நாட்டுக்குச் செல்லவிருக்கிறர்கள். 27-12-70 இரவு 8 மணிக்கு "இசையும் இறைவனும்" என்னும் பொருளில், சுவாமிகளது பிரசங்கம் நிகழும்.
(ந நீ.)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை
### வண்ணை, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் வழமைபோல ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை, சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். பகல் 10 மணியளவில் சிவபூசை, தமிழ் மறையோதல், நாவலர் சரித்திரம் (சில பாகம்) படித்தல், மாகேசுர பூசை.

இரவு விரிவுரைக் கூட்டம்: சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேவார மணி திரு. P. A S. இராஜசேகரன் அவர்களுடைய மாணவ மாணவிகளின் தேவார இன்னிசையும், சற்குருமணிமாலையோதலும், சைவப் பெரியார்களுடைய விரிவுரைகளும் நிகழும்.

x x x

## ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரியம்பாள்கோவிலில்

யாழ் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நடைபெறும். 20-11-70 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் டி கழகத் தலைவர் திரு. க.சோக்கலிங்கம் [ சோக்கன்' ] அவர்கள் தலைமையில் நிகழவிருக்கும் மேற்படி விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்த இருக்கிறர்கள்.

x x x

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்

கொழும்பு ஜிந்துப்பிட்டி என்னும் ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் 21-11-70 சனிக்கிழமை மாலை 6-00 மணி முதல் நாவலர் விழாக்கொண்டாடப்படவிருக்கிறது. டி கோவிலில் போயா விடுமுறைதோறும் மாலை 6 மணி முதல் 6-30 வரை கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடைபெற்று வருவது பாராட்டுக்குரியதாகும்.

x x x

16, 23, 30-11-70 திங்கள் திருக்கேதீச்சரம் சங்காபிஷேகம்
21-11-70 சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை.
28-11-70 சனிக்கிழமை அமாவாசை விரதம்.

## ஸ்ரீ காசிமடம் உபயம்
## உருத்திராக்க விதானங்கள்

கீழ்க்கண்ட தலங்களிலும் உருத்திராக்க விதானங்கள் அணிவிக்கப் பெற்றுள்ளன.

21. திருப்புகலூர் ஸ்ரீ வாத்தமானேஸ்வரப் பெருமானுக்கு 27—9—70 ல் 1¾ அடி சதுரத்தில் 17 சரங்களில் 434 மணிகள கொண்ட விதானம் அணிவிக்கப்பெற்றது.

22. திருச்செங்காட்டங்குடி ஸ்ரீ கணபதீஸ்வர சுவாமிக்கு 3—10—70 ல் 1¾ அடி சதுரத்தில் 17சரங்களில் 420 மணிகள் கொண்ட விதானம் அணிவிக்கப்பெற்றது

23. சென்னை - மைலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவர சுவாமிக்கு 4—10—70 ல் 2¼ அடிசதுரத்தில் 23சரங்களில் 741 மணிகள் கொண்ட விதானம் அணிவிக்கப்பெற்றது.

—'குமாதருபரன்' 18-1?-70.

## வானொலியில் கேட்கலாம்.

நல்லைச் சிவன்கோவிலில் இன்று நிகழவிருக்கும்இயமசங்காரஉற்சவ நிகழ்ச்சிகளை நேர்முக வர்ணனை செய்து வானொலியில் ஒலிபரப்ப வா. ப. ஒழுங்கு செய்துள்ளனர்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞு ஐப்பசி மீ உஎ-வ வெள்ளிக்கிழமை [1970]

## சிவ தீட்சை

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றே"

இந்த மனிதப் பிறவி நமக்குக் கிடைத்தது பசுவினுடைய ஐந்து திரவியங்களைக் கொண்டு அபிஷேகஞ்செய்யப்படுகின்ற பரம்பொருளாகிய சிவபெருமானுடைய பணி செய்தற் பொருட்டேயாகும். அப் பணிகளுள் சிறந்தது சிவபெருமானுடைய நாமத்தைக் கூறி அவரை நம் முள்ளங்களில் தியானஞ் செய்தலாகும். அப் பணியையாரம்பிப்பதற்கு நாம் ஒரு குரு மூலம் பஞ்சாட்சர உபதேசம் பெறுதல் வேண்டும். இவ்வுபதேசத்தைப்பெறும் முறையே சிவதீட்சையெனப்பெறும். 'தீட்சை' என்பதன் பொருள் கெடுத்துக் கொடுப்பது. அஞ்ஞானத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது. ஸ்ரீ பஞ்சாட்சரம் அஞ்ஞான யிருளை நீக்கி ஞானவொளியை நல்க வல்லது ஓதுவார்தமை நன்னெறிக் குய்க்க வல்லது.

ஒரு குரு மூலம் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசம் பெறுபவர் தினமும் காலையில் ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து குரு உபதேசித்த கிரமப்படி சந்தியாவந்தனஞ் செய்தல் வேண்டும். சந்தியாவந்தனம் காலையில் செய்யும் வழிபாடு. குரு உபதேசிக்கும் சந்தியாவந்தன முறைப்படி பூமி சுத்தி, கணபதி, குரு வந்தனம், சலசுத்தி, ஆசமனம், முதலிய கிரியைகளைப் புரிந்து மூலமந்திரசெபஞ் செய்தல்வேண்டும்.

சிவமூல மந்திரத்தை நூற்றெட்டுத் தரமும், தேவி மூல மந்திரம், கணபதி மூலமந்திரம், சுப்பிரமணிய மூல மந்திரம் என்னும் இவைகளைத் தனித்தனியே பத்துத்தரமுஞ் செபித்துக் குட்டி கும்பிட்டு பிராணயாமஞ் செய்து சிவம், சத்தி, கணபதி, முருகன், சமய குரவர், அறுபத்து மூவர் இவர்களை இயன்றயளவில் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை பக்தியுடன் கண்ணீர் சொரிந்து ஓதுதல் வேண்டும். ஓதும்பொழுது மனநிலை, மெய்யின் நிலை, வாக்கின் நிலை எவ்வாறிருக்க வேண்டுமென்பது இத் தேவாரத்தில் உறுதிபண்ணப்பட்டிருக்கின்றது. வேதங்களின் இருதய மந்திரமாகிய சிவ நாமத்தை பக்தியுடன் ஓதுகின்றவர்களுக்கு இம்மை மறுமை வீட்டின்பங்கள் எய்தும்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் 83-ஆம் வெளியீடாக 1954-ம் ஆண்டில் வெளியிடப்பெற்ற 'சுருக்க அனுட்டானவிதி' என்னும் நூலுக்கு ஷை ஆதீன நூல் நிலையப் பாதுகாவலராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் எழுதிய முகவுரையின் ஒரு பாகத்தைச் சைவ மக்களுடைய நல்வாழ்வு கருதிக் கீழே பிரசுரிக்கின்றோம். 8ம் பக்கம் முதற் பந்தி,

"சைவ சமயத்திலே பிறக்கும் புண்ணியம் வாய்க்கப்பெற்றவர்களிலே பலர் சிவதீட்சை பெற்று அனுட்டானம் பழகிப் பஞ்சாக்கரசெபம் பண்ணுதல் இன்றி, இக் காலத்திலே வாளா நாளைக் கழிக்கின்றனர். சிலர், சுருங்கிய நேரத்தில் பண்ணும்படி இருத்தல் எளிதென்கின்றனர். புலால் உண்ணும் பழக்கத்தைக் கைவிடாதார் பலர் பஞ்சாக்கர செபம் பண்ணுதலில் மிகவிருப்ப முடையராய் இருக்கின்றனர். என் செய்வது! மானுடப்பிறவி அரிதாய்க் கிடைத்தும் பயன்பெறும் முயற்சியில் அவர் தலைப்பட்டிலர். உத்தியோக முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சிலருக்கு அனுட்டானம் முதலியன ஒரு பெருஞ்சுமையாக உள்ளது. ஆகையால், புலால் உண்ணமல் இருக்கும் அன்பர்கள் பொருட்டாகவே இச் சுருக்க அநுட்டான விதி வெளியிடப்பெறுகின்றது. பயன் பெறுவார்களென நம்புகிறேன்".

## நாவலர் நல்வாக்கு

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

## புதிய அரசியல் திட்டம்

[புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பெறும் பொழுது அதில் சேர்க்கவேண்டிய முக்கிய அம்சங்களை நல்லூர், வழக்குரைஞர் திரு. இராஜேஸ்வரன் தங்கராசா, அரசியல் திட்ட அமைப்பு அமைச்சருக்கு அனுப்பியிருக்கின்றார்.]

1. மத சார்பற்ற ஜனநாயக சோஷலிச அரசு நிறுவப்படுதல் (a) இந் நாட்டுப் பிரஜைகளெனக் கருதப்படுபவர்களுக்கும் (b) நாடற்றவர் எனக் கருதப்படுபவர்களில் 1948ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வசித்து இலங்கையினையே தாயமாகக் கொள்ள விரும்புபவர்களுக்கும் (அவர்களுடைய சந்ததியினர்க்கும்) சமமான பரிபூரணத்துவ பிரஜா உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

2. சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக்கப்பட வேண்டும். அதாவது நிர்வாக நீதிமன்ற போதனா மொழிகளாகவேண்டும். எல்லா கல்லூரிகளிலும் இரு மொழிகளும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

3. சுதந்திரமான நீதி பரிபாலனம் இருக்க வேண்டும். நாட்டிலுள்ள சட்டத் துறையினரால் உயர் நீதிமன்றநீதிபதிகள்தெரிவுசெய்யப்படல் வேண்டும் மற்ற நீதிமன்றங்களின் நீதிபதிகள் அவ்வப் பகுதி வழக்குரைஞர்களால் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

4. நீதிமன்றங்களில் அமுல் நடத்தக் கூடிய 12 அம்சங்கள் கொண்ட அடிப்படை உரிமைச் சாசனம் அரசியல் திட்டத்தில் இடம் பெறல்வேண்டும். 12 அம்சங்களாவன.

(அ) தனிப்பட்ட ஒருவரின் சுதந்திரம், மரியாதை, உயிர் ஆகியவற்றின் உரிமை.

(ஆ) நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமை – அரசாங்கத்துடன் அல்லது தனிநபர்களுடன்.

(இ) பத்திரிகை, பேச்சு, வெளியீட்டுச் சுதந்திர உரிமை.

(ஈ) கூட்டங்கள் நடாத்தவும் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கும் உரிமை.

(உ) வேலை நேரக் கட்டுப்பாடும்; குறைந்த பட்சச் சம்பள உத்தரவாதம் அமைக்கப்பட்ட உரிமை.

(ஊ) வயதானவரும் வேலையற்றோரும் பென்ஷன் பெறும் உரிமை (அரசாங்கத்திடமிருந்து)

(எ) தனியார் முதலீடு வியாபாரம் முதலியன செய்யும் உரிமை.

(ஏ) தனியார் சொத்தை வைத்துக் கொள்ளவும் பாதுகாக்கவும் உரிமை.

(ஐ) தாய்மொழி மூலம் கல்வி பெறும் உரிமை. இத்துடன் வடக்கு கிழக்கு தெற்கில் அவ்வப் பகுதியில் மத கலாசாரத்தைப் பேணத்தக்க வகையில் இன்னும் மூன்று பூரண பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும்

(ஒ) இன, மத, தேசிய பாகுபாடற்ற முறையில் அரசாங்கத்திலும், இராணுவ சேவைகளிலும் மற்றும் ஸ்தாபனங்களிலும் வேலைவாய்ப்புப் பெறும் உரிமை.

(ஓ) ஜனநாயகக் கொள்கைகளுக்கமைய சட்டசபை உள்ளூராட்சி மன்றங்கள் இயங்குதல். கிரமமாகவும் சுதந்திரமாகவும் அரசியல் உயர்தரப் பதவிகள் தெரிவு செய்து நிரப்பப்படும்உரிமை.

(ஔ) இன, மத, ஜாதி, பால் பாகுபாடற்ற முறையில் சகல மக்களுக்கும் அரசியல் பொருளாதார சமூகத் துறைகளில் சமவுரிமை.

## தக்ஷிண கைலாச மான்மியம்

[1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

குள்ளாகப் போய் பல மாயாயுத்தங்களைச் செய்தான். சிவகுமாரர் வேற்படையைச் செலுத்தி கிரவுஞ்சமலையையும் தாரகாசுரனையும் சம்மாரம் செய்தருளினர். குமாரக் கடவுள் அவுணனைச் சம்மாரம் செய்து அவ்விடத்தில் இருந்து திருச்செந்தூரில் வந்து வீரவாகு தேவரை சூரபதுமனிடம் தூதனுப்பி அவனுடைய மனக் கருத்தைத் தெரிந்துகொண்டு இரதத்தில் ஆரோகணித்துச் சைனியங்ளோடு திருச்செந்தூரில் நின்றும் கதிர்காமம் போய் மாணிக்க கங்கைக் கரையில் ஏமகூடம் என்னும் ஆலயத்தை விசுவகன்மனைக்கொண்டு இயற்றுவித்து அவ்வாலயத்தின் நடுவணுகப் பொருந்திய சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்.

குமாரக்கடவுள் சேனைகளுடன் ஏமகூட ஆலயத்தில் வந்திருந்தலைச் சூரபதுமன் அறிந்து மிகவும் கோபங்கொண்டு பானுகோபன் முதலிய புத்திரர்களையும், தருமகோபன் முதலான மந்திரிமார்களையும் சேனைத் தலைவர்களையும் தம்பியாகிய சிங்கமுகாசுரனையும் நால்வகைச் சேனைகளோடும் குமாரக் கடவுளோடு சமர்செய்யும்படி தூண்டினன். அவர்கள் போர்க்கோலம் கொண்டு போர்க் களத்திற் போனர்கள். வீரவாகு முதலிய வீரர்களும் சேனைகளும், தருமகோபன் முதலிய மந்திரிமார்களையும் அக்கினிமுகாசுரன் முதலியவர்களையும் பானுகோபனையும் வதைத்தார்கள். சிங்கமுகாசுரன் வந்தெதிர்க்க சுப்பிரமணியக் கடவுள் குலிசத்தைச் செலுத்தி அவனைச் சங்காரம் செய்தார். பின்பு சூரபதுமன் தனது ஆட்சிக்குட்பட்ட அண்டங்களில் இருக்கும் சேனைகளுடன் தேரின் மீதேறி போர்க் களத்திற் போய் கோபம்கொண்டு குமாரக் கடவுளுடன் எதிர்த்துப் போர்செய்ய குமாரக் கடவுளும் எதிர்த்துப் போர் செய்தார். குமாரக் கடவுள் சூரபதுமனது சேனைகளைச் சக்கரப் படை முதலியவைகளாலும், சிரிப்பினின்று தோற்றிய அக்கினியினாலும் உங்காரம் சொல்லியுரப்பியும் அழித்தார். இப்படிப் பலவகைப்பட்ட பெரும்போர் நடந்தது. சூரபதுமன் பெரிய ஒரு இருள் வடிவம்கொண்டு தேவர்களை உண்ணும்படி ஆகாயத்திற்போக முருகக் கடவுள் வேற்படையைச் செலுத்தினர். அவுணன்கொண்ட மாயாஇருள் அழிந்தது. சூரபதுமன் மாமர வடிவமாக வேற்பெருமான் அதை வெட்டியது. பின் அவுணன் சொந்த வடிவாய் வாட்படையுடன் கடவுளுக்கு எதிரில் வர வேற்பெருமான் அவனுடைய மார்பைப் பிளந்து தேகத்தை இருகூறுகச்செய்து கங்கையில் ஸ்நானம் பண்ணி குமாரக் கடவுளுடைய திருக்கரத்தில் வீற்றிருந்தது. பிளவுபட்ட அவ்விரு பாகங்களிலும் இருந்து சேவலும் மயிலுமாகத் தோன்றி முருகக் கடவுளுடன் எதிர்க்க கருணாநிதியாகிய குமாரக் கடவுள் திருவருட் பார்வை செய்து மும்மலங்களையும் நீக்கியருளி சிவஞானத்தையுண்டுபண்ணி சேவலைத் தேரின் மீது கொடியாக இருக்கும்படி செய்து மயிலை வாகனமாகக் கொண்டு செலுத்தியருளினர். தேவர்கள் தோத்திரம் செய்து பூமாரி சொரிந்தார்கள். சண்முகக் கடவுள் சயந்தாதி தேவர்களைச் சிறை மீட்டு மகேந்திரபுரியை வருணனுக்கு விருந்தாக உண்ணும்படி உதவி யுத்த களத்தினின்று வீரர் பூதர் முதலானோர் புடை சூழக் கதிரமலைக்குச் சென்றருளினர்.

[வளரும்]

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ம் நம்பர் கடையில திரு. கா. ந இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு செப்ரேம்பர் (புரட்டாதி) மீ 1-ம் திகதி (1-9-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில 16-12-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1970ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 19ம் திகதி (19-12-70) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

ஏல. 370 13, 27—11—70

## திருமுறை விழா

கொழும்பு விவேகானந்த சபையாதரவில் 13, 14-11-70 வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் திருமுறைவிழா மிகச் சிறப்பாக கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலய மண்டபத்தில், பட்டிமன்றம், கவியரங்கு இசை அரங்கு, உரையரங்கு முதலிய நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

சென்னை, கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜெகநாதன் சிறப்புரை நிகழ்த்துவார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

எழுவைதீவு அம்பலவாணர் சின்னத்தம்பி —வழக்காளி
வழ: இல. M, B. 9391 எதிராக
நயினாதீவு தற்போது யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, பாண்டியன் தாழ்வு ஒழுங்கை, 16-ம இலக்கத்தில் வசிக்கும்,
1. முருகேசு கந்தையாவும் பெண்
2. விசாலாட்சியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9391 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1970-ம் ஹூ டிசம்பர் மாதம் 18-ந் திகதி (18-12-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4000/- இன்னும் ரூபா 2000/-க்கு 5-9-1967 தொடக்கம் 6-9-1969 வரை 12 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 467-80

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி நயினாதீவுக் கோவிற்பற்று நயினாதீவு இறை "பெரியபுலம்" நி. பர. (6) ஆறும் வீடும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கனகசபை இராமச்சந்திரனுக்கும் மருபேருக்குமுரிய ஆதனம், வடக்கு கீழ்க்காணும் ஆதனமும், மறுபேருக்குமுரிய ஆதனமும், மேற்கு பாலசுந்தரம பெண் பாறுமதியினுதனம், தெற்கு சின்னத்தமபி மாரிமுத்துவுக்கும் குலசேகரம் பெண் கண்மணிக்குமுரிய ஆதனங்கள்,

பதிவு இலக்கம்: யாழ்ப்பாணம் C. 206/262

2. ஷை நயினாதீவு இறை "கச்சுப்புலம்" நி. பர. 12 கணைகளும் எல்லை கிழக்கு நமசிவாயம் பெண் வள்ளியம்மைக்கும் சிவசுப்பிரமணியம் பெண் நாகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள். வடக்கு சரவணமுத்து மகள் உமா மகேஸ்வரிக்கும் நாராண பிள்ளை செல்லையாவுககுமுரிய ஆதனங்கள், மேற்கு ஒழுங்கை, தெற்கு மேற்கூறிய முதலாம் ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் நி. பர. 3 குளி, 1/2 பதிவு இல: யாழ்ப்பாணம C 316/176

S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட், சாவகச்சேரி, 30-10-70
எம் 362 13-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இல: M. B. 9245

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவன்கோவில் ரோட்,
அப்பாச்சிப்பிள்ளை சதாசிவம் மகன் கயிலாசனி
எதிராக —வழக்காளி
யாழ்ப்பாணம், கொக்குவில் பொற்பதி ரோட்,
1 பொன்னையா இரத்தினமும் மனைவி
2 சிவசோதிப்பிள்ளையும் —எதிராளிகள்

M. B. 9245ம இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனங்கள் 1970ம ஹூ டிசம்பர் (மார்கழி)மீ 6உ (6-12-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அவ்வவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 13500/- மேலும் 10000/-ரூபாவுக்கு 17-7-67 தொடக்கம் 15-3-68 வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 435-36 சதம பவுண்டேச் மறறும் விறபனவுக்குரிய சலார்களும் இதில ரூபா 11750/- குறைய

ஆதனங்கள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "பழநியாவத்தை"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தையா இராசதுரை அல்வாய் வடக்கு, —வழக்காளி
வழ: இல M. B. 8520 எதிராக
1 நடராசா விஜயரத்தினமும் மனைவி
2 நீலாதாச்சியும் இருவரும் வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8520-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணியை 1970-ஆம் ஆ மார்கழி (டிசம்பர்)மீ 9-ம் திகதி (9-12-70) புதன்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 28,950-00 ம, 15-10-66 தொடக்கம் 11-3-67 வரைக்கும் ரூபா 20,000 00 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 589-78ம, இதில் தீர்வைத் தொகையில் கொடுத்த ரூபாய் 15,000-00 மும் கோட்டுச் செலவில் கொடுத்த ரூபாய் 300-00 கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "அத்திக்கலட்டி வடரிக்கூடலும் இத்திக் கலட்டியும மறுதுண்டும்" நிலப்பரப்பு 13 குழி 9, 5/16ம் உறுதியின்படி உத்தரவுபெற்ற சேவையர் K. ஐயாறுவால் 28-7-62ல் தயாரிக்கப்பட்ட 90-ம் இலக்க சேவே படத்தின்படி நிலப்பரப்பு 13 குழி 3ம, வீடும், கிணறும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் பவாணிக்கும், கந்தையா இராசரத்தினத்திற்குமுரிய ஆதனம், வடக்கு வேரிவைரவயகத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு வயித்திலிங்கம நாகலிங்கத்திற்கும் சிவபாதசுந்தரம் பெண் சோதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு சிவபாதசுந்தரம் பெண் செல்வரத்தினத்திற்குமுரிய ஆதனம், இதடங்கலும் இந்த எல்லைகளுக்குட்பட்டவைகளும். இதன்பின் கட்டப்படும் கட்டிடங்களும்.

கா. தர்மலிங்கம்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
உடுப்பிட்டி, 25-10-70,
எம், 368 13-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி, ஸ்ரேசன் ஒழுங்கை,
1 வயித்திலிங்கம் தம்பியையாவும் பெண்
2 சங்கனிதி —வழக்காளிகள்
இல: M: B 8889 எதிராக
யாழ்ப்பாணம், ஈச்சமட்டை, நவரெத்திலம் திருநாவுக்கரசு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8889ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1970-ம் ஹூ கார்த்திகைமீ 30-ம் திகதி [30-11-70] திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6330/-ம், 27-2-67 தொடக்கம் 14-11-69 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 624-20

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளியும் சிவியாதெரு இறை "புங்கன் துறைவயல் புங்கன்துறைப்புலம் புங்கடியிற்புலமும் நாவீதன் தறை" நெற்பரப்பு 19¼லும் கிலப்பரப்பு 67 இரண்டும் 86¼ நெற்பரப்பும் கிலப்பரப்பும் ஆனல் 1953ம் ஆண்டு ஆவணி மீ 5ம் திகதி உததரவு பெற்ற உலாந்தா A லாசறஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட அளவுப்படம் இல; 794 ன்படி பர. கில. இலா. 67 குளி 16 இதில் மேற்குப் பக்கமாக பிரிவிடப்பட்ட பர. கில. இலா. 10 வான்பயிர் செய்பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் குறிப்பிட்ட மேற்கிலுள்ள பர, கில, இலா. 10க்கு எல்லை கிழக்கு தம்பு பாலசிங்கம் பெண் முத்துமணிக்குரிய ஆதனம். வடக்கு பிறட்றிக் பிருன்சிஸ்சுக்குரிய ஆதனம். மேற்கு கந்தையா ஆறுமுகம், தில்லையம்பலம் கைம்பெண் இராசம்மா; ஆறுமுகம் சோமசுந்தரம் பெண் விமலாம்பிகை, கந்தர் சிதம்பரப்பிள்ளை பெண் செல்வம், கந்தையா பெண் தங்கரெத்தினத்துக்குரிய ஆதனமும், பிரதான ஒழுங்கைக்குப் போகும் ஒழுங்கையும், தெற்கு முருகேசுபிள்ளையும் பெண் நாகரெத்தினத்துக்குரிய ஆதனம். கிழக்கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் தண்ணீர் பங்கும் போவதற்கு வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்.

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
20, பெருமாள்கோவில் வடககு ஒழுங்கை.
யாழ்ப்பாணம். 23-10-70
எம், 373 13-11-70

நிலப்பரப்பு 8½ இதில் கிழக்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பு 3½ கல் வீடும், செய்பயிர் வான்பயிர்களும், கிணறும், மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் உரியவழிவாய்க்காலும் மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு பொற்பதி ரோட், வடக்கு ஒழுங்கை, மேற்கு சின்னப்பொடி சின்னத்தம்பி, தெற்கு சின்னப்பொடி முருகேசுவும், கந்தையா கைம்பெண் சுப்பம்மாவும்.

பதிவு D. 308/221

2. ஷை கொக்குவில் கிழக்கிறை "நேறிஒல்லை" நிலப்பரப்பு 9 குளிகள் 11¼ ஆனல் 14-7-1964ல் அளவையாளர் T. சின்னத்துரை அவர்களால் 1521/A இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 8 குளிகள் 6, 2/8 கொண்டதுமான இவ்வாதனத்தில் இதே படத்தில் லொட் 2 எனக் காட்டப்பெற்றதும் நிந்தமாக்கப்பட்டதுமான நிலப்பரப்பு 4 குளிகள் 3, 1/8 செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு சொல்லப்பட்ட படத்தில் லொட் 1 எனக்காட்டப்பெற்ற பாவிப்புக்குரிய கையொழுங்கை, வடக்கு ஒழுங்கை, மேற்கு தாமோதரம்பிள்ளை கந்தையா, தெற்கு முதலித்தம்பி தம்பிராசாவும் மனைவி இந்திராதேவியும், சொல்லப்பட்ட கையொழுங்கை பாவிக்க உரிமையும், வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்துக்குரிய தெற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், சொல்லப்பட்ட படத்தில் லொட் 2, 3 எனக் காட்டப்பெற்றவைகளுக்கு கிழக்கெல்லை ஓரமாக வழிவாய்க்காலும் சேர்த்து இது முழுவதும்.

பதிவு D. 308/220

வி. செ, குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்.
Commissioner Sales & Valuer
"இராச கிரி" 643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம். 2-11-70
எம் 359 13-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வழ இல: M B 10641
1. காரைநகர் கிழக்கு யாழ்ப்பாணம் சின்னத்தம்பி மார்க்கண்டு பொன்னம்பலம் பெண் கமலாம்பிகை
2. ஷையூர் சின்னத்தம்பி மார்க்கண்டு பொன்னம்பலம் —வழக்காளிகள்
எதிராக
1. ஐயனார் கோவிலடி வண்ணார் பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் வயித்திலிங்கம் பேரம்பலம்
2. ஷையூர் பெண் பாக்கிய லட்சுமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 10641-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் என்னுல் முறையே 1970-ஆம் ஹூ கார்த்திகை மீ 30-ம திகதி (30-11-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முதலாம் ஆதனமும் பிற்பகல் 3-00 மணி தொடக்கம் இரண்டாம் ஆதனமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5392-00 ம் ரூபா 3000-க்கு 25-2-69 தொடக்கம் 17-7-69 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 438-75 கோட்டுச்செலவில் ரூபா 175/-ம் தீர்வைத் தொகையில் ரூபா 2000/-மும் ஆக ரூபா 2175/- கொடுபட்டது.

சாணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணய டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை "தச்சன் வளவு" பர நீ இல. ஒன்றரை (பர. நீ இல 1, 1/2) கிணறும் செய்பயிர்வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுக அகல முள்ள கையொழுங்கை வடக்கு மாதர் ஆறுமுகம் கைம்பெண் பாக்கியத்திற்குரியவாதனம், மேற்கு சங்கரப்பிள்ளை அம்பலவாணருக்குரிய வாதனம். தெற்கு முருகேசு மாணிக்கத்திற்கும் பெண் மாரிமுத்துவிற்குரிய வாதனம். இதடங்கலும். ஆறுமுகம் பாக்கியத்தின் தெற்குக காணிக்குரிய கிணற்றில் பங்கும், வழி இறை வாய்க்கால் தூர்வை உரித்தும் பிற நீங்கலாக.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறைக்கோவிற்பற்று சரவணை இறை 'உதரூன்' செ. பர. ஒன்பது (செ. பர. 9) எல்லை கிழக்கு சிவலிங்கம் பெண் இரத்தினத்திற்குரியவாதனம், வடக்கு நடராசா பெண் செல்லம்மாவிற்கும் கனகசபாபதி பெண் அம்பிகைக்குமுரியவாதனங்கள். மேற்கு தெய்வேந்திரம் பெண் பாக்கியத்தின் ஆதனம். தெற்கு தெய்வேந்திரம் பெண் பாக்கியத்திற்கும் செல்லத்துரை பெண் சவுந்தரநாயகத்திற்குமுரிய வாதனங்கள். இதடங்கலும் இன்னமும் வடக்குப் பக்கத்தில் மேற்கருகாக மேற்கு ஒழுங்கைக்குப் போக்குவரவு செய்வதற்கு குறித்த அம்பிகைக்கும் பாக்கியத்திற்கும்பொதுவாக உள்ள கிலத்தில் விட்டிருக்கும் எட்டு முழப் பாதையுரித்தும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
1970-ம் ஹூ ஐப்பசி மீ 15ம் உ.
காரைநகர்.
எம். 366 13-11-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 8929
சிதம்பரப்பிள்ளை சபாரத்தினம் வில்லானை, களபூமி, காரைநகர் —வழக்காளி
எதிராக
1 வேலுப்பிள்ளை நடராசாவும்
2 பெண் மகேஸ்வரி
3 ஆறுமுகம் இராமநாதன்
அனைவரும், காரைநகர் கிழக்கு —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8929ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1ம் காணி 1970ம் ஹூ டிசம்பர் மாதம் 7ம் திகதி (7-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும், அதன்பின் அன்று மு. ப. 11மணிக்கு மேற்காட்டிய 1ம், 2ம் எதிரிகளின் கீழ்க்காட்டிய இரண்டாம் காணியின் K. ஆறுமுகம் பிரசித்த நோத்தாஸ் அவர்களால் 3-11-63 ல் 3173ம் இலக்கத்தில் முடிக்கப்பட்ட உறுதியின் உருத்தையும் உறுதியையும் கீழ்க் காட்டிய இரண்டாம்காணிக்கு முன் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தோகை: நுபா 9541 பின் 14-3-67 திகதி தொடக்கம் 8-7-70 வரை நுபா 8500/-க்கு 7 வீத வட்டியும் பின் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் சேலவு நுபா 849-35 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை "கறுவியத்தனை" பரப்பு நெல்லு லாச்சம் 22½ கிணறும் அதன் பாவிப்பு உருத்தும் எல்லை கிழக்கு கந்தையா முருகேசுவின் ஆதனம், வடக்கு அருணசலம் கந்தையாவுக்கும் இராமலிங்கம் கைம்பெண் இலட்சுமிக்குரிய ஆதனம் மேற்கு குமாரு சண்முகத்தின் ஆதனம், தெற்கு கந்தையா விசுவலிங்கத்துக்கும் சின்னத்தம்பி கைம்பெண் இலட்சுமிக்குரிய ஆதனம் இது அடங்கலும்

2. முதலாம், இரண்டாம் எதிரிகளின் உறுதிப்படியும் உருத்துப்படியும் பிரசித்த நோத்தாரிஸ் K. ஆறுமுகம் அவர்களின் 3-11-63ல் No 3173 எழுதப்பட்ட உறுதிப்படி மேற்படி குறிச்சியில் 'குத்தடுவேப்புலம்' ப. நீ. 9, 1/2 வீடுகளும், கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு அம்பலவாணர் சரவணமுத்துவின் ஆதனம், வடக்கு சோந்தக்காணியில் அமைக்கப்பட்ட ஒழுங்கை, மேற்கு விசுவநாதர் ஆறுமுகத்தின் ஆதனம், சின்னத்தம்பி சண்முகத்தின் ஆதனம், இது அடங்கலும்.

சி. சே. மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஏலத்தாரர்.
'விதானை வளவு'
சித்தன்கேணி. 2-11-70.
எம். 375 13-11-70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுப்பிராய், நாகலிங்கம் பொன்னுத்துரை
(யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு 1011ம் இலக்க வழக்கில தத்துவக்காரர்) —வழக்காளி
வழ: இல. M B 6498 எதிராக
கோண்டாவில் 1 வேலுப்பிள்ளை கதிரிப்பிள்ளை (இறந்தவர்)
287, நாவலர் வீதி; 1. (a) கதிரிப்பிள்ளை கந்தசாமி
ஆனைப்பந்தி. (ஆதனத்துக்குச் சட்டப்படி
யாழ்ப்பாணம். [பிரதிநிதி)
கோண்டாவில் 2. கந்தையா பொன்னுத்துரை
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6498-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுகாணிகள் 1970-ம்ஞு மார்கழிமீ 14-ம் திகதி (14-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 2387-76 சதமும். 16-3-64 தொடக்கம் 31-3-65 வரைக்கும் ரூபா 1400/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 259-65 சதமும்

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "நுணுகை வப்புலம்" நி. பர 6 தென் கிழக்கு மூலையிலுள்ள கிணற்றில் பங்கும் பயிர்களும் இந்த நி. பர. 6க்கு எல்லை கிழக்கு இளைய தம்பி மகன் பூரணத்துக்கும் பங்காளருக்குமுரிய காணி. வடக்கு ஒழுங்கை, மேற்கு செல்லப்பா சின்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய காணி, தெற்கு நவசிவாயம் மார்க்கண்டுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலிலும் சொரியலாக 1/3 பங்கும் அதன் உடமைகளும்.

2. ஷை கோண்டாவில் இறை 'கொட்டைக்காடு' நி, பர 36 இந்த 36 பரப்புக்கும் எல்லை கிழக்கு நாகநாதர் முருகேசுவுக்கும் பங்காளருக்குமுரிய காணி வடக்கு கருணாகரர் வேலாயுதருக்கும் பங்காளருக்குமுரிய காணி, மேற்கு வைரவி நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை, இதடங்கலினும் சொரியலாக 1/16 பங்கும் அதன் உடமைகளும்.

3 ஷை கோண்டாவில் இறை "நிக்கானை" நி. பர. 6½ இந்த 6½ பரப்புக்கும் எல்லை கிழக்கு பொன்னு பெண் சின்னம்மாவின் ஆதனம், வடக்கு வேலாயுதர் பொன்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு சின்னத்தம்பி சின்னக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி கார்த்திகேசுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாக நி. பர. ½ தவிர மீதி முழுவதிலும் சொரியலாக 1/2 பங்கும் அதன் உடமைகளும்.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.
Commisioner of Sales, & Auctioner & Values,
மல்லாகம்,
8-11-70
எம். 372 13—11—70

---

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10797
இமையாணன் குறிச்சி 1. அருணாசலம் இராஜேந்திரன்
2. பெண் சின்னப்பிள்ளை
எதிராக —வழக்காளிகள்
சமரபாகுதேவன் குறிச்சி.
1. மாணிக்கன் நாகரத்தினம்
2. நாகரத்தினம் மகன் தங்கராணி
3 தம்பன் மாணிக்கன் —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்விபரிக்கப்படுமாதனம் 1970ம்ஞு மார்கழிமீ 19-ம் திகதி (19-12-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

1. சமரபாகுதேவன் குறிச்சியிறை கொட்டிக்கட்டி நி. பர. 6½ ஷை நி. பர. 14 ஷை குடா நி, பர. 6, 3/8 இதில் தெற்குப் புறமாக ஆட்சிப்படி நி. பர. 6 குளி 12 15/16 இதில் கிழக்குப் புறமாக நில. பர. 2 எல்லை கிழக்கு வேலன் சின்னவனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு இளையவன் கைம்பெண் சின்னம்மாவுக்குடைய ஆதனம். மேற்கு கணபதி வேலன் கைம்பெண் சிதேவிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு சின்னவன் சரவணைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலிரண்டு பங்கும்.

2, ஷை குறிச்சி இறை எளுவத்தை நி பர. 84 7/8 இதில் பிரிவிடலாட்சிப்படி நி. பர. 1½ எல்லை கிழக்கு எங்களில் 3 பேருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு கையொழுங்கை, மேற்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு சிவலை சபாபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலிரண்டு பங்கும்.

3. ஷை இறை எளுவத்தை நில. பர. 84 7/8 இதில் பிரிவிடலாட்சிப்படி நி. பர. 8 குளி 8 எல்லை கிழக்கு ஆள்வான் தம்பனுக்குடைய ஆதனம், வடக்கு கையொழுங்கையும் சின்னவன் பெண் சின்னிக்குமுடைய ஆதனமும். மேற்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடையஆதனம், தெற்கு கணபதிப்பிள்ளை முருகேசுவின் பிள்ளைக்குடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்டவை அடங்கலிற் சொரியலாய் மூன்றிலொரு பங்கும்.

| | | |
|---|---|---|
| துரட்சித்தொகை | ரூபா | 990-75 |
| ரூபா 500/-க்கு 12 வீத வட்டி 7—2—70 தொடக்கம் 15-6-70 வரை | | 21-25 |
| ரூபா 1012/-க்கு 5 வீத வட்டி 15-6-70 தொடக்கம் 23-9-70 வரை | | 13-65 |
| | | 1025-65 |
| கோட்டுச்செலவு — — | | 202-74 |
| மொத்த தொகை | | 1228-39 |

R. S. இராமநாதன்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
Comisioner of Sales, Auctioneer & Valuer
"உமாபதி"
தும்பளை, நெல்லண்டை ரோட்,
பருத்தித்துறை,
2-11-70
எம். 355. 13—11—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 11432
காங்கேசன்துறை
1. பொன்னன் சின்னத்துரை
—வழக்காளி
எதிராக
மயிலிட்டி 1 மாதன் கதிரன்
—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 11432-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆ மார்கழி மாதம் 10-ஆம் திகதி (10-12-70) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா:— 4,865-00 இதில் ரூபா 3000 க்கு 1-2-70 திகதி தொடக்கம் 29-4-70 திகதி வரைக்கும் 10 வீத வட்டியுடன் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 412-06.

### ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை சங்குவத்தை விலப்பரப்பு 30. இதில் மேற்குப் பக்கமாக விலப்பரப்பு 15 ம் செய் பயிர்களும் எல்லை கிழக்கு கந்தன் கோவிந்தனுக்கு உரிய ஆதனம். வடக்கு சின்னவி மாற்கண்டுவுக்கு உரிய ஆதனம். மேற்கு சரவணை கந்தசாமிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் தெற்கு சின்னப்பு கதிரேசுவுக்கு உரிய ஆதனம். இதில் 15 விலப்பரப்பும் அதைச் சேர்ந்தவைகளும் விற்கப்படும். பதிவு இலக்கம் H 355/161.

ந. ஆறுமுகம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்
சித்தன்கேணி, 21-10-70,
எம் 365 13-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1. புத்தூர் மேற்கு வீரவாகு சுப்பையா
2. ஷையூர் பெண் பாறுபதிப்பிள்ளை
3 ஷையூர் சுப்பையா தம்பிராசா —வழக்காளிகள்
இல: M B 7889 எதிராக
1. புத்தூர் மேற்கு பெரியான் பொன்னன்
2. ஷையூர் பெண் பசுபதி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7889 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970 ஆம் ஞு மார்கழி மீ 7-ம் திகதி (7-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 16,800-ம் ரூபா 12000/-க்கு 15-12-1965 தொடக்கம் 17-11-66 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 461-92 இதில் ரூபா 15,600/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை 'கொணுவற்காடும் குருக்கட்டும் பரவில இலா நாற்பத்தொன்பது குழி பதிமூலரை எல்லை கிழக்கு ஒழுங்கையும், முருகன் நீலனுக்கும் பெண் செல்லிக்கும் தவசி கதிரவேலனுக்குமுரிய ஆதனமும், வடக்கு சுப்பிரமணியம் சந்திரசேகரம் பெண் நாகரெத்தினத்திற்கும் சுந்தரமூர்த்தி பெண் மகாலெட்சுமிக்குமுரியவாதனங்கள், மேற்கு சுந்தரமூர்த்தி பெண் மகாலெட்சுமிக்கும், கந்தன் சபாபதிக்கும் பெண் முத்தம்மாவிற்குமுரியவாதனங்கள், தெற்கு கந்தன் சபாபதி பெண் மூத்தம்மாவின் ஆதனமும், ரோட்டும், முருகன் வேலனுக்கும் பெண் செல்விக்கும் உரிய ஆதனமும். இதடங்கலும், தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிலும் தண்ணீர் இறைக்கும் விஸ்றர் டீசல் இயந்திரத்திலும், இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும் கொட்டிலிலும் தண்ணீர் தாங்கியிலும் 8/6 பாகமும் கொங்கிறீற்றால் கட்டப்பட்ட இறைவாய்க்கால் வழி உரித்தும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.
காரைநகர். 1970-ம்ஞு ஐப்பசிமீ 25-ம் திகதி
எம்.367 13-11-70,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1 ஐயாத்துரை சண்முகநாதன்
2 பெண் நவமணி சங்கானை கிழக்கு, —வழக்காளிகள்
இல. M B. 8570 எதிராக
1 தர்மலிங்கம் கனகசபை
2 பெண் நாயகமுகதேவி, ஆவரங்கால் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8570 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக்காணிகளை 1970ம் ஞு மார்கழி மாதம் 19 ம் திகதி (19 12—70) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், 11-00 மணிக்கு மூன்றாம் காணியும முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிறை "அழகன்புலம்" பர நில. இலா 3-0 பனை மாங்கள் வடலிகளுடன் இதற்கெல்லை கிழக்கு வேலாயுதர் கதிர்காமரின் உருத்தாளருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு கந்தையா சபாபதிக்குரிய ஆதனம், மேற்கு சுப்பர் பெண் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு கதிரவேலு சபாபதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு

பதிவு இல: 212/218

2. ஷை பிரிவு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "வடுவவுடை" பர. நெ. இலா. 30-0 இதற்கெல்லை கிழக்கும், தெற்கும் கார்த்திகேசு பெண் சின்னாச்சியின் ஆதனம், வடக்கும் மேற்கும் கதிர்காமர் கார்த்திகேசுவின் ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு பதிவு இல: 212/222

3. ஷை யூர் "தட்டாற்றிட்டி" பர. நெ. இலா. 68¾ இதற்கெல்லை கிழக்கு, வடக்கு, தெற்கு தம்பையா பெண் தங்கம்மாவின் உரிமைபாளரினுதனம், மேற்கு இளையதம்பி பெண் அபிராமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத 1/2 பங்கு. பதிவு இலக்கம்: 174/225

ப, நா திருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம். 3-11-70
எம். 357 13-11-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M B 10809
வண்ணார்பண்ணை வடமேற்கு
கந்தையா நடராசா
— வழக்காளி
எதிராக
வண்ணார்பண்ணை வடமேற்கு தற்சமயம் 17/21, பாரதி வீதி, திருகோணமலை. கண்ணையா (அல்லது நமசிவாயம்) கைம் பெண் கனகம்மா காலம்சென்ற குமாரசாமி கண்ணையா (அல்லது நமசிவாயத்தின் கோட்டுப் பிரதிநிதி.
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10809-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1970-ஆம் ஞு கார்த்திகை மீ 20-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை;முதல்வட்டி ரூபா 1960-ம் 17-5-69 தொடக்கம் 11-2-70 வரைக்கும் ரூபா 1000 க்கு 12 வீத வட்டியும அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 422-70.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்கோவிற்பற்று கொக்குவில் மேற்கிறை "மந்திப் புலம்" வில. பர. 2, 3/8, வீடும், செய் பயிர் வான் பயிர்களும், பனைகளும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை வல்லிபுரத்துக்குரியவாதனம். வடக்கு தம்பு இரத்தினத்திற்குரியவாதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஒழுங்கை இதடங்கலும். வடக்குக் காணியின் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும். மேற்கெல்லையில் இருக்கும் ஒழுங்கையால் இந்தக் கிணற்றுக்குப் போக்குவரவு செய்யும்உரித்தும்.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 3-11-70
M, 360 13-11-70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 13—11—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்